Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி௴ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - சுசு] யாழ்ப்பாணம்:- ஜய ௵ ஆவணி௴ கஅ உ வெள்ளிக்கிழமை (3, SEPT. 1954) [இல - உஉ]

# மொழிவாரி மாகாண அமைப்பு

## காந்தியடிகளே எண்ணத்துக்குக் கர்த்தா

### ஐக்கியம் மலர்தற்கு அஃதே வழி

மொழியை அடிப்படையாகக்கொண்ட மாகாணப் பிரிவினை இன்று மக்களின் முழக்கமாக மாறி இருப்பதை மக்களாட்சியில் நம்பிக்கையுள்ள யாரும் மறுப்பதற்கில்லை.

மொழியின் அடிப்படையில் மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும்என்றகுரலை காந்தியடிகள் தான் முதன் முதலில் நம் நாட்டில் எழுப்பியவர், இந்திய தேசிய மகாநாடு தேசிய விடுதலை இயக்க காலத்தில் மக்களுக்குக் கொடுத்த பல வாக்குறுதிகளில் 'மொழிவழி மாகாணப் பிரிவினை' முக்கியமான தொன்ருகும். இதனை ஆதரித்து மகாநாடு எத்தனையோ தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கின்றது. பல்வேறு சமயங்களில் இச்சிக்கலைப் பற்றி ஆராய தார் குழு 'வி. ஜே. பி. குழுபோன்ற சில குழுக்களும நியமிக்கப்பட்டதுண்டு. ஆனல் காங்கிரசு சுதந்திரம் பெற்று அரியணையில் அமர்ந்தவுடன், இதில் அக்கறை காட்டாததோடு, காலம்கடத்தி இதற்கான மக்கள் கிளர்ச்சியை அடக்கி ஒழித்து விடவும்கூடத் துணிந்துவிட்டது! ஆட்சியாளரின் பொதுக் கொள்கை இவ்வாறு இருந்தபோதிலும் இதற்கு மக்களுடைய ஆதரவு பெருகிக் கொண்டே வந்தது. பல்வேறு கட்சிகளும் இந்தக் குறிக்கோளுக்கு ஆதரவும் காட்டுகின்றன. பொதுவுடைமைக் கட்சி போன்ற அனைத்திந்தியக் கட்சியும் மண்டலக் கட்சிகளாகிய, திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக்கழகம் இன்னும் பல்வேறு பகுதிகளில் இச்சிக்கலுக்கு ஆதரவாகத் தோன்றிய பலமொழிக் கட்சிகளும் (திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரசு - ஆந்திரமகாசபை போன்றவை) இதற்குப் பேராதரவு கொடுத்திருக்கின்றன. அதன்பயனுக மொழிவழி மாகாணப் பிரிவினைக் கோரிக்கை இன்று நம் நாட்டில் மக்கள் இயக்கமாக மாறி மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலிக்கின்றது. இந்த இயக்கத்தின் இதயத் துடிப்புத்தான் இன்று நம் நாடெங்கும் கேட்கின்றது. இந்தப் பரந்த இயக்கத்தின் ஒரு அம்சந்தான், இன்று திரு — தமிழகத்தில் அறப்போராகப் பரந்து வியாபித்திருக்கிறது.

மக்களின் இத்தகைய உரிமைக் கிளர்ச்சிக்கு எதிரான கும்பலொன்று எதிர் விவாதங்களைப்பறைசாற்றி வருவதைச் சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டும். மொழியின் அடிப்படையில் மட்டுமின்றிப் பூகோளத் தொடர்ச்சி பொருளாதாரநிலை போன்ற அம்சங்களையும் கணக்கிலெடுத்தே நாடுகள் பிரிக்கப்படவேண்டும் என்று ஒரு கூட்டத்தார் விவாதிக்கின்றனர். இவர்களுடைய நிபந்தனைகளிலிருந்தே மொழிவழி மாகாணப் பிரிவினைக்கு எதிரிகள் யாரென்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இவர்கள் பொருளாதார காரணத்தைக் காட்டி மக்கள் கண்ணிலே மண்ணைத்தூவ முயலுகிருர்கள் இன்று இருக்கும் சுமார் 30 மாகாணங்களில் எங்காவது நிதியில் தன் தேவையை நிறைவேற்றும் மாகாணமுண்டா? சென்னை திரு.கொச்சி, ஆந்திரம் எங்குமே துண்டு விழும் வரவு-செலவுத் திட்டம்தானே காணப்படுகிறது? அப்படியானல் இந்த மாகாணங்கள் எவ்வாறு இயங்குகின்றன? இந்திய கூட்டமைப்பின் ஒரு அங்கம் என்பதற்காகத்தானே மத்திய அரசாங்கம் நாடெங்குமுள்ள முக்கிய துறைகளைத் தன் கையிலெடுத்துக் கொண்டு, தேவைப்பட்ட மாகாணங்களுக்கு மத்திய அரசாங்கத்திலிருந்து நிதி கொடுத்து உதவுகின்றது இதே விதிதான் மொழிவாரி மாகாணங்களுக்கும் பொருந்தும் மொழிவாரிப் பிரிவினை என்பது பாகிஸ்தான் பிரிவினையல்ல. மொழிவழி மாகாணம் இந்தியக் கூட்டமைப்பின் ஒரு அங்கமாக இன்றைய நிலைமையைப் போலவே பிரிவினைக்குப் பின்னும் இயங்கும் தவிரவும் மொழிவழி மாகாணங்கள் அமைந்தால் திண்ணமாக அது நிருவாகச் செலவில் ஒரு பெரிய இலாபத்தையும் கொண்டுவரும். 30 மாகாணங்களாக உள்ள பாரத நாடு மொழிவழி மாகாணங்கள் அமைந்தால் சுமார் 20க்கும் குறைவான மாகாணங்களாகவே இருக்கும். ஆகவே நிருவாகச் செலவைக் குறைக்கிற இச்சிக்கலிலே பொருளாதாரப் பூச்சாண்டி காட்டி ஏமாற்றுவது, வெறும் அறியாமையோ அல்லது மக்களை

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## சிவப்பிரதிட்டானுக்கிரகமணி

சிவப் பிரதிஷ்டையிலே, அனுக்ஞை முதல் மகாபிஷேகம்பரியந்தம் தேவையான திரவியங்களெல்லாம் குறிக்கப்பெற்றுள்ள சிவப் பிரதிஷ்டானுக்கிரமணி என்னும் பட்டோலைப்பிரதி ஒன்று சற்குருநாதசுவாமிகளாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கையாலோ அல்லது அவர்கள் வாய்க்கேட்ட அவர்கள் மாணுக்கர் கையாலோ எழுதப்பட்டு அவர்களிடம் இருந்தது. அவர்களுக்குப்பின் அவர்கள் சகோதரியாரின் பேரனுகிய ஸ்ரீமத். சிவ இ. மாரிமுத்து உபாத்தியாயரவர்களிடமருந்து இப்போது தன்னிடத்திலிருப்பதாகவும் தேவையானவர்கள் பிரதிபண்ணிக் கொள்ளலாமென்றும் வண்ணுர்பண்ணை ஸ்ரீசித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார் அவர்கள் அறியத் தருகின்றூர்.

# ஸ்ரீலஸ்ரீ தட்சணாமூர்த்தி சுவாமிகள் திருநாள்

( தெல்லிப்பழை திரு. செ. கோவிந்தசாமி எழுதியது )

இப்பெரியார் யாழ்ப்பாணத்துத் தாவடியென்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வண்ணுர் பண்ணை இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய ஸ்ரீ சோமாஸ்கந்த பண்டிதருடைய சகோதரராவர். இவர் இளமையிலே சைவப்பற்றும் கடவுள் பக்தியு முடையவர். உலக விவகாரத்தில் வெறுப்புத் தோன்றினமையால் தமது தாய்நாடாகிய யாழ்ப்பாணத்தை விட்டகன்று இந்தியாவுக்குச் சென்றனர்.

அங்கு கன்னியாகுமரி தொடக்கம் காசிவரையும் பலதலங்களுக்கும் நடந்தே தீர்த்தயாத்திரை, தல யாத்திரைகளைச் செய்தனர். சிதம்பரத்திலே நீண்டகாலம் தங்கியிருந்து நடேசப் பெருமானைத் தரிசனஞ் செய்தனர். அக்காலம் நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலையில்தலைமை ஆசிரியராய் இருந்த சைவப் பெரியார் ஸ்ரீ ம. க. வேற்பிள்ளைப் புலவரிடம் தமிழ் இல்க்கண இலக்கியங்களையும், சமய சாஸ்திரங்களையும் ஐயந் திரிபறக் கற்றுணர்ந்தனர்.

வட தென்மொழி இரண்டிலும் நல்ல பயிற்சியுடையராயினர். இதனல் வேதங்கள் ஆகமங்கள் உபநிடதங்களையும் தாமே கற்றுணர்ந்தார்கள். முத்தீட்சைகளையும் பெற்றுச் சிவபூஜா துரந்தரராகவும் விளங்கினர்.

இவர் சிதம்பரத்தின் எல்லைகடந்து வெளியே எங்கு சென்றாலும் தாம் எடுத்துக்கொண்ட தவக் கோலத்துக்கிணைய திருவருளின்வழிச் செல்வார், உரைநூல்கள் கட்டுரைகள்

[தொடர்ச்சி 6ம் பக்கம்]

# ஆசிரியர்களுக்கு ஆங்கில அறிவும் கலை ஆராய்ச்சியும்

## மறுமலர்ச்சிக்கு வேண்டப்படுவன

— வண கலாநிதி தனிநாயகம் அவர்கள்

மட்டக்களப்புக் தமிழ்க் கலைமன்றக் கூட்டத்திலே வண சுவாமி கலாநிதி தனிநாயகம் அவர்கள் பேசும் போது இலக்கியம் உட்பட எல்லாக்கலைகளிலும் ஏதாவது மறுமலர்ச்சி ஏற்படுமாஞல் அது கடந்தகாலத்திய கலைவளர்சசியை முற்றும் சரியாக ஆழ்ந்து ஆராய்வதன் விளைவாகவே ஏற்பட வேண்டும், கலாசார மரத்தின் ஆராய்ச்சி எவ்வளவு ஆழமாயும் பரந்தும் செல்கின்றனதோ அவ்வளவுக்கு அம்மரம் செழிப்பாக வளர்வதைக் காணலாம். இலங்கையின் கலாசார வளர்ச்சியில் ஏற்படும் எந்த மறுமலர்ச்சியும் இப்போதைய சேவைகளை அலட்சியம் செய்ய முடியாது. இப்போது பாடசாலைகளில் பல்வேறு வகுப்புகளிலும் கல்வி கற்கும் பிள்ளைகளுக்குத் தேவைப்படும் பாடப் புத்தகங்களை ஆக்குவதில் நூலாசிரியர்கள் கவனஞ் செலுத்திஞல் அவர்கள் ஒருதேசிய சேவை புரிந்தவர்களாவார்கள். அதன் விளைவாக சுய பாஷைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் ஆங்கிலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மிடையேயுள்ள வேற்றுமை நீங்கிவிடும்.

நமது கல்வித்துறை வளர்ச்சியில் மிகவும் பலவீனமாயுள்ள பகுதி ஆசிரியப் பயிற்சியாகும். சுயபாஷா ஆசிரியர்கள் கல்வி நூல்களை வாசித்து விளங்கக்கூடிய அளவுக்கு ஆங்கிலஞானமும், கல்வி வாழ்க்கையில் அவர்களுக்குப் பரந்த மனப்பான்மையும் அளிக்கும் வகையில் பயிற்சிக் கலாசாலைகளும் இருந்தால் கல்வி கலாசார மறுமலர்ச்சியிலே அவர்கள் முன்னணியிலே திகழ்வர், என்று கூறினர்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். ஜய ௵ ஆவணி ௴ கஅ உ வெள்ளிக்கிழமை

## எல்லை கடந்தால் என்னதான் விளையுமோ?

ஜர்மானியருள் யூத இரத்தஞ் செறிந்தவர்களை காடுகடத்த எண்ணிய ஹிட்லர் நாடிழந்து காணமிழந்து நாவிழந்து திக்கிலராகி ஆண்டுகள் பத்து ஆகவில்லை. இவ்வாறு வரலாற்றில் மமதை பிடித்தோர் பலரை மறலி பிடித்து இடித்து ஒடித்துவிட்ட விபரங்கள் உண்டு. இன்னுமா இரணியர்கள் புறப்படுகின்றார்கள்? இரணிய இலக்கங்கள் எழும்புகின்றன?

திரிசிங்கள பெரமுனை உருக்கொண்டெழுந்தநின்றுவதைச் சிங்களத் தலைவர்கள் கண்டுங் காணாதார் போன்று மௌன மாய விரதம் பிடிக்கின்றார்கள். வேறு சிலர் இந்த இயக்கத்துக்கு மறைமுகமாய் ஆதரவு கொடுக்கின்றார்கள். இன்னுஞ்சிலர் இந்த நச்சு கிலேசத்தாரை மெச்சிப் பேசுகின்றார்கள். இவ்வித செயல்களினால் இனத்தையும் இனத்தையும் எதிரிகளாக்கும் எழுச்சி உண்டாகும் என்பதையும் உண்டாகுங்கால் விபரீத விளைவுகள் தோன்றுமென்பதையும் இத்தலைவர்கள் அறியவில்லையா?

தமிழ்பேசும் மக்களுக்கெதிராக ஒரு போராட்டத்தை எழுப்பிவிட இந்தத் திரிசிங்கள முன்னணி அல்லும்பகலும் உழைத்து வருகின்றதென்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஆங்கில மொழியில் அச்சுழுதிதி வெளியிட்ட திரிசிங்கள முன்னணி பத்திகையொன்றிலே தமிழர்களுக்கும் அவர்தம் மொழிக்கும் மாறாக இகழ்ச்சிக் குறிப்புகள் இருப்பதைச் சமரசம் பேசும் சிங்களத் தலைவர்களும் சமதர்மம் வாதாடும் செஞ்சிங்களத் தலைவர்களும் அறிந்தும் அறியாதார்போலிருக்கின்றார்கள்.

பாராளுமன்றத்திலே திரிசிங்கள முன்னணியைப் பற்றிய கேள்விகளுக்கு அமைச்சர்கள் விகட முறையில் விடைகொடுத்தமையும் அதன்பின் நாடெங்கணும் இந்த முன்னணி எந்த விதத்திலும் வகுப்புப் போரை வரவழைக்கத்

## வாழ்க்கை வானில் —

— வானம்பாடி

### புகைவண்டி உல்லாசப் போக்கு

சென்ற திங்கட்கிழமை ஆரம்பமாயது அதிவேகப் புகைவண்டிப் பிரயாணச் சேவை. தெற்கு நோக்கி உருகுன வண்டி, வடக்கு நோக்கி யாழ்ப்பாணம் வண்டி, நடுவண் நோக்கி மகாநுவற வண்டி என்ற புனை பெயர்களுடன் புறப்பட்டன. தக்கிண வண்டியும் மத்திய வண்டியும் திட்டப்படி ஓடின. உத்தர திசை வண்டியோ ஓடியும் முடியாமற் போனது.

X X X

### வசதிக்காகவா மதிப்புக்காகவா?

வாழ்க்கையில் நேரம் என்னும் பொருள் மிகமிக முக்கியமானது. போக்குவரத்து வசதியாயும் வேகமாயும் வேண்டும். கல்வி நுண்ணியல் ஆராய்ச்சியால் வேகம் என்பது சுலபமாய் விட்டது. இருந்தும் கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கு 252 கட்டை தூரத்துக்குப் புகைவண்டி பத்து மணித்தியாலத்தில் ஒழுங்காக நேரத்துக்கு வரமுடியாதிருப்பதுஎன்ன? யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏராளமான புகைவண்டி நிலையங்கள் இருக்கின்றன என்பது உண்மையே. அவ்வாறென்றால் இருவழிப்பாதை இங்கே ஏன் ஏற்படுத்தப்படவில்லை. பொல்காவலை தொடக்கம் மொறட்டுவ வரைக்கும் இருவழிப்பாதை இருப்பதாற் போக்குவரத்து சுலபமாகின்றதல்லவா?

X X X

### ஒருவண்டி பிந்தினால் வருவதெல்லாம் பிந்த வேண்டுமா?

நேற்று யாழ்ப்பாண அதிவேக வண்டி தீவிரகதியில் வந்தும் ஒருமணி நேரத்துக்குப்பின்னர்தான் வடபால் வந்து சேர்ந்தது. அதற்கு முன்னர் புறப்பட்ட தபால் கொண்டுவரும் புகைவண்டி இதைப் பின்தொடர்ந்து யாழ்ப்பாணம் தொடக்கம் காங்கேயன்றுறையினுக்கும் ஓடினது இந்தத் தடுமாற்றத்துக்குக் காரணமென்ன? திட்டத்திற் போட்டுவிட்டாற் போதுமா? நடைமுறையில் அல்லவா வேகம் வேண்டும்?

தாண்டி வருவதும் தமிழ்பேசும் மக்களுக்கு எச்சரிக்கை ஆகின்றன.

பொதுவுடைமையினரையும் அவர்களின் கொள்கைகளையும் வேரோடு களைந்துவிட வேண்டுமென்று ஒழுங்குகள் செய்துவரும் அமைச்சவையும் அரசாங்க ஆதிக்கக் கட்சியும் வகுப்புவாத முன்னணியைத் தடைசெய்ய முடியாதிருப்பதென்னையோ?

எல்லை கடந்தால் என்றும் இன்னலே விளையுமென்பது வரலாற்று உண்மை. இனப்போர் தொடக்க எண்ணுந்தலைவர்களின் மனப்பான்மையை அரசாங்கம் ஆதரிக்கின்றதா என்று நாம் கேட்கின்றோம்?

### ஐக்கியநாட்டுச் சபைக்குப் போகின்றது பாகிஸ்தான்

காஷ்மீர்ப் பிணக்கைத் திரும்பவும் ஐ. நா. சபைக்கு அனுப்பப் பாகிஸ்தான் தீர்மானித்திருக்கின்றதாம்.

### இலங்கையிலேயே பயின்ற விமானிகள்

இலங்கையிலேயே பயின்ற எழு ஆகாய விமானிகள் தங்கள் பயிற்சியிற் பூர்த்தியெய்தி முதல் மந்திரியாராற் பாராட்டப்பட்டனர். ஸ்ரீ என். எஸ். செல்வராசன், ஸ்ரீ ஏ. வரதராசா, ஸ்ரீ ஆர். விவேகானந்தன் ஆகியோர் இவர்களுள் மூவர்.

முன்னிதழ்த்தொடர்ச்சி — [8]

# செந்தமிழ்ச் சிவத்திரு நான்மறைகள்

## 'இருக்கு' 'சாமம்' 'வேதங்கள்' ஆராய்ச்சி

—:o:—

வேதச் சிறப்பைக் கூறுங்கால், திருமூலர் ஓரிடத்திலாதல் நான்கு வேதங்களின் பெயர்களையும் குறித்திலர். இருக்கு வேதச் சிறப்புமட்டும் அவரால் எடுத்துரைக்கப்படுகின்றது. இருக்கொழிந்த மற்றைய வேதங்களை என திருமூலர் எடுத்துக்காட்டிலர் என்பது ஆராய்ச்சிக்குரியதாகும் ஆசிரியர் திருமூலர் மூவாயிரஞ் செய்யுட்களே அருளிச் செய்தாரென்பது "முன்னியவப் பொருண்மாலைத் தமிழ் மூவாயிரஞ் சாத்தி" எனச் சேக்கிழார் பெருமான் கூறிய செய்யுட் பகுதியால் தெரிகின்றது. இப்பொழுதுள்ள திருமந்திரப் பதிப்பில் மூவாயிரத்துக்கு மேல் நாற்பத்தொன்பது செய்யுட்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. திருமந்திர முதற் செய்யுள், "ஒன்றவன்றானே எனத் தொடங்குவதேயாமென்பதை "என வெடுத்தோதி "ஒன்றவன்றன்" என எடுத்து அருளிய பகுதியால் சேக்கிழார் பெருமான் நினைகாட்டுகின்றார். இப்பொழுது உள்ள திருமந்திரத்தில், ஒன்றவன்றான்' எனுஞ் செய்யுட்குமுன், "போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை" என்னும், "ஐந்து கரத்தனை" என்னும் செய்யுளுங் காணப்படுகின்றன. திருமூலர் திருமந்திரத்திலும் அவர்க்கு முற்பட்ட திருவாசகத்திலும், அவர்க்கு முற்பட்ட சங்க நூல்களினும் யானைமுகக் கடவுளாகிய பிள்ளையாரைப் பற்றிய வணக்கம் காணப்படவில்லை. தேவாரங்களில் யானைமுகக் கடவுளைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

.... .... ... .... ... .... ... ... .... .... ... ... .... .... .... ... .... ....

வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்
க. வேந்தனார் அவர்கள்

... .... ... .... .... .... .... ... ... .... ... .... .... .... .... ....

இதனால் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பின்பே தமிழ்ச் சைவ உலகில் யானைமுகப் பிள்ளையார் வழிபாடு தோன்றியிருத்தல் துணியற்கும். ஆசிரியர் மறைமலையடிகள் முதலான தென்னாட்டுத் தமிழறிஞர்கள் கருத்தும் இதுவேயாகும்."

6. திருமூலர் திருமந்திரத்தில் ஓரிடத்தக் காணப்படாத பிள்ளையாரின் வழிபாடு யானைமுகத்து மாத்திரம் காணப்படுதலானும், ஆசிரியர் சேக்கிழார் ஐந்து கரத்தனையென்ற செய்யுளை முதற் செய்யுள் எனக் குறிக்காமையானும் திருமந்திரப் பாயிரத்தில் காணப்பெறும் வேதச் சிறப்பு ஆகமச் சிறப்புக்களைப் பற்றிக் கூறும் பல செய்யுட்கள் பிற்காலத்தினரால் இடையிற் சேர்க்கப்பட்டனவாதல் வேண்டும். வேதச் சிறப்பில் இருக்கு வேதத்தை மாத்திரங் கூறுதலும், பெற்றநல் ஆகமங் காரணம் காமிகம் என இக்கால ஆகமப் பெயர்களை எடுத்துக் கூறுதலும், பஞ்சாக்கரம் பிரணவம் முதலியவற்றை வடமொழி எழுத்துக்களுடன் தொடர்வான தோற்றங்காட்டிக் கூறுதலும் இதற்கெடுத்துக்காட்டாகும்.

இனி ஆசிரியர் திருமூலர் தாமியற்றிய திருமந்திர நூலினையே,

"நந்தியிணையடி நான்தலை
மேற்கொண்டு
புந்தியினுள்ளே புகப்பெய்து
போற்றிசெய்து
அந்திமதிபுனை அரனடி
நாடொறும்
சிந்தைசெய்து ஆகமஞ்
செப்பலுற்றேனே"

தமிழ் ஆகமமெனக் குறிக்கின்றார். திருமூலர் "வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவனூல்" என கூறிய கருத்தை வைத்துக்கொண்டு அவர், வேதமெனச் சுட்டியது பலகோடி சிறுதெய்வ வணக்கங்களையும், கட்குடியும் உயிர்க்கொலையும் மலிந்த வெறியாட்டு வேள்விகளையும் மிகப் பெரிதாகப் பாராட்டி ஆரியக் குருமார்கள் ஆக்கிய பாட்டுக்களே பெரும்பாலும் மலிந்த இருக்கு யசுர் சாமம் முதலிய ஆரிய வேதங்கள் அல்ல. மலம் நீங்குதற்பொருட்டு, உயிர் தன்னை அதுவாகக் கருதும், 'சோகம் பாவனையை' நினைகாட்டியுரைக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபை
# 66-வது வருடாந்தக் கூட்டம்

மேற்படி சபையின் 66-வது வருடாந்தக் கூட்டம், நிகழும் ஜய ௵ ஆவணி ௴ கக உ (4.9 54) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்:

1 விபூதி தரித்தல் — தேவாரம்
2 சென்ற வருடாந்தக் கூட்ட அறிக்கை.
3 காரியதரிசியின் வருடாந்த அறிக்கை வாசித்தல்.
4 சைவபரிபாலன சபையினதும் சைவப்பிரகாச யந்திரசாலையினதும் பரிசோதிக்கப்பெற்ற 1953 – 54-ம் ஆண்டுக் கணக்குகள் வாசித்தல்
5 ஆங்கில சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சைவசமய பாடத்தில் முதலாவதாகச் சித்திபெய்திய மாணவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கல்.
6 C. பிரிவுக்கு திருவாசகசபை அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்
7 புது வருடத்திற்குரிய சபை உத்தியோகத்தரைத் தெரிவுசெய்தல்
8 பிரேரணைகள்:
 1. திரு. சித. மு. ப சிதம்பரநாதச் செட்டியாரவர்கள்.
 2. திரு. ச. தியாகராசா அவர்கள்.
 "அங்கத்தவர் தொகையைப் பெருக்குவதற்கு உதவியாகச் சபையின் 3-ம் விதி 5-ம் பிரிவில் வரும் Six month (ஆறு மாதம்) என்னும் சொற்களில் Six (ஆறு) என்பதற்குப் பதிலாக Three (மூன்று) என்னும் சொல்லை மாற்றி வைக்கவேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது."
 திரு. தியாகராசா அவர்களின் வேறு பிரேரணைகள்.
9 வேறு விஷயம்.

யாழ்ப்பாணம்,
23-8-54

அ. அருளம்பலம்
கௌரவ காரியதரிசி

குறிப்பு: அங்கத்தவத்துக்குரிய சந்தாப் பணத்தைப் பாக்கியின்றிக் கட்டாதவருக்கு வாக்குரிமையில்லை. ஆகையால் அங்கத்தவர்கள் யாவரும் தங்கள் சந்தாவைக் கூட்டத்துக்குமுன் அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

கணக்குச் சம்பந்தமான வினாக்கள் இருந்தால் அவைகளைத் தனாதிகாரிக்கு 30-8-54 க்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்கவும்.

'அத்துவக்காத்து' ஸ்ரீ. நாகலிங்கம் அவர்கள்

## நூற்றாண்டு விழா

சிறந்த தேசாபிமானியாகவும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் உப தலைவராகவும், இந்துசாதனம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் முக்கிய தாபகர்களுள் ஒருவராயும், இந்துக்கல்லூரியின் முதல் 'மனேஜராக'வும் சேவைகள் பல புரிந்துவந்த 'அத்துவக்காத்து' ஸ்ரீமான் சி. நாகலிங்கமவர்களின் நூற்றாண்டுப் பூர்த்தி வருகிற 1955-ம் ஆ. ஐப்பசிமீ சதய நக்ஷத்திரத்தில் நிகழ்வதால், அத்தினத்தில் அப்பெரியார் பெயரால் இந்துக்கல்லூரி மண்டபத்தில் சிவபூசை, மாகேசுர பூசை முதலியன புரிந்து பின் அவர் ஆற்றிய பரோபகாரச் செயல்களை யெல்லாம் பாராட்டி ஒரு பகிரங்கக்கூட்டம் நடாத்தவேண்டுமென்று 1954-ம் ஆண்டு ஆவணி (ஆகஸ்ட்) மாதம் 30-ந் திகதி நடைபெற்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையாரின் வருடாந்தக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

# திருமுருகாற்றுப்படை — இலக்கிய நயம்

---0-0---

## முருகன் வணக்கத்தை ஊக்கும் எழில்

(முற்றொடர் — 5)

கிண்கிணி விளங்கும் ஒண் செஞ்சீறடி; திரண்டு பொலியும் கால்கள்; வளைந்து நுடங்கும் இடை; அகன்று பருத்திருக்கும் தோள்கள்; துகிலும் மேகலையும் அணியப்பெற்று விளங்கும் அல்குல் ஆகிய மறுவற்ற உறுப்புக்களினால் உருவாகிய கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பினையுடைய சூர மகளிர் சிலர்.

அழகுக்கு அழகு செய்தது போல் மேனியைக் கைபுனைந்தியற்றியுமிருக்கின்றார்கள். கோழிக் கொடியைப் பாடுவதற்காக கொண்டையிலே பூக்கள்; திலகம் தைஇய தேங்கமழ் திருநுதலிலே சுருளாது அங்காந்த வயபாசப் பண்ணிய தலைக்கோல ; மார்பிலே வந்தசையுப்படி காதிலே பிண்டி யொண்டளிர்; மார்பிலே சகதனச் சாந்து; இந்த முறையிலே அமைந்துள்ளது அவர்கள் ஒப்பனை.

கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பும் கைபுனைந்தியற்றிய ஒப்பனையழகும் வாய்ந்த இச் சூர மகளிர் விளாத் துளிர்களைக் கிள்ளிக் கிள்ளி எறிந்து கோழிக்கொடியை ஏத்திப் பாடி ஆடுகின்ற பொழில்கள் பல விளங்குகின்ற வெற்பொன் றுளது

**திரு. சி. முருகவேள்**

எழுதியது

அவ் வெற்பின் சாரல்களில் உள்ள காந்தட் பூக்களினாலாய கண்ணி மிலைந்த சென்னியன் முருகன்,

> மால்வரை நிவந்த
> சேணுயர் வெற்பிற்
> கிண்கிணி கவைஇய
> வொண்செஞ் சீறடிக்
> ... ... ... ... ...
> ... ... ...
> கைபுனைந் தியற்றாக்
> கவின்பெறு வனப்பின்
> ... ... ... ... ...
> ... ... விரிமலர்
> வேங்கை நுண்டா
> தப்பிக் காண்வர
> வெள்ளிற் குறுமுறி
> கிள்ளுபு தெறியாக்
> கோழி யோங்கிய
> வென்றடு விறற்கொடி
> வாழிய பெரிதென
> றேத்திப் பலருடன்
> சீர்திகழ் சிலம்பகஞ்
> சிலம்பப் பாடிச்
> சூர மகளி
> ராடுஞ் சோலை
> மந்தி யறியா
> மரன்பயி லடுக்கத்துச்
> சுரும்பு மூசா
> சுடர்ப்பூங் காந்தட்
> பெருந்தண் கண்ணி
> மிலைந்த சென்னியன்.

காந்தட் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன் என்று முருகனது சென்னியழகைக் காட்ட வந்த கவிஞர் சூர மகளிர் அழகையும் ஆடலமைதியையும் இவ்வளவுக்குப் பார்க்க அழகிய சித்திரமாகக் வேண்டிய அவசியமென்ன? முருகன் வணக்கத்தைக் கொள்வதால் ஏற்படக்கூடிய சாந்தியையும் துடிப்பையும் இன்பத்தையும். எதிர்ப்பட்டவனுக்குக் குறிப்பாக உணர்த்துவதே கவிஞர் கருத்தாக இருக்கலாம். சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடியாடும் மகளிர் கூட்டம் அத்தகைய சாந்திக்கும் துடிப்புக்கும் இன்பத்துக்கும் ஒரு சின்னமாகக் காட்டப்பட்டிருக்கிறது எனலாம். இந்த முறையிலே கவிஞன் எதிர்ப்பட்டவனுக்கு முருகனிடம் ஏற்படக்கூடிய கவர்ச்சியையும் பெரிதாக்கி விடுகின்றான். ஆடலும் பாடலும் நிறைந்த உல்லாச வாழ்க்கை எப்பொழுதும் மனித உள்ளத்தை ஈர்க்கும் தன்மையுடையதல்லவா?

இனி, சூர மகளிரின் சித்திரத்தைக் கவிஞர் எவ்வாறு அமைத்துள்ளார் என்று பார்க்கலாம். முதலில் கவிஞர் அம் மகளிரின் சில குறிப்பிட்ட உடலுறுப்புக்களைத் தொகுத்துக்காட்டி அவர்களுக்குரிய இயல்பான வனப்பைக் காட்டுகின்றார். அவர்களின் சிரம்பித்ததுபோ வழியும் உயிர்ப்பண்பையும் உற்சாகத்தையும் உணர்த்தப்போலும் சீறடியோடு கிண்கிணியையும் காட்டினர். அடியோடினுற்றான் கிண்கிணி ஒலிக்கும். பின்னர் சூர மகளிர் ஆடலைச் சிறப்பாகக் கூறப்போகின்றாராதலின் கிண்கிணியைத் தொடக்கத்திலே பிரஸ்தாபித்தமை பொருத்தமுடையதாகும்.

'கிண்கிணி கவைஇய
வொண் செஞ் சீறடி"

இவ்வடி கிண்கிணியின் ஓசையைக் கேட்பிப்பதோடு சூர மகளிரின் உயிர் நிறைந்த வாழ்க்கைப் பண்பையும் உணர்த்த வல்லதாயிருக்கின்றது.

சூர மகளிரின் இயற்கையான வனப்பைக் காட்டி, அடுத்து அம் மகளிர் தம் மேனிகளை அழகு செய்யுமாற்றைக் கூறுகின்றார் கவிஞர். கூறுவதனால், அம் மகளிர்க்கு கோழிக் கொடியைப் பாடி ஆடுவதில் உள்ள ஆர்வத்தைப் புலப்படுத்திவிடுகின்றார்.

சூர மகளிர் கோழிக்கொடியைப் பாடிஆடுவதைக் கவிஞர் காட்டுமுறை சாலச் சிறந்ததாகும். அம் மகளிர் கோழியோங்கிய வென்றடு விறற் கொடியைப்பாடும் பொழுது விளாத்துளிர்களைக் கிள்ளிக் கிள்ளி எறிகின்றார்கள். இதனைக் கவிஞர் கூறும் முறையைப் பாருங்கள்.

> "... ... ... ... ... ... ... ... ...
> காண்வர
> வெள்ளிற் குறுமுறி
> கிள்ளுபு தெறியா
> ... ... ... ... ... ... ... ..."

ஒருவகையான முறிவுடன் செல்லும் ஓசை சூரமகளிர் மணிக்கட்டளவிலே கைகளை அசைத்து விளாத்துளிர்களை எறியும் காட்சியை நம் கண் முன்னே நிறுத்திவிடுகின்றது. ஓசையைக்கொண்டே கட்புலனுக்காய ஒரு சித்திரத்தைக் கவிஞன் படைத்துவிடுகின்றான்.

சூர மகளிரின் ஆடல் பாடலினால் மலைச்சாரல்களிலெல்லாம் ஒரே ஆரவாரம். ஆடல்நிகழ்ச்சியைக் கூறுகின்ற பொழுதே இந்த ஆரவாரத்தைப் புலப்படுத்திவிடுகின்றார் புலவர்.

> 'சீர்திகழ் சிலம்பகஞ்
> சிலம்பப் பாடிச்
> சூர மகளி ராடுஞ் சோலை"

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# அறியாமையின் கொடுமையும் அரிவையர் கடமையும்

## ஆபத்திலிருந்து உலகை மீட்டல் அவர்களுக்கே ஆகும்

[அழகிய தோற்றத்துடன் வெளிவந்திருக்கும் "தமிழ் மகள்" [illegible]ன்காவது ஆண்டுமலர் எது நல்லது எது மற்றது எனச் சொல்ல முடியாதனவாய் மக்கள் முன்னேற்றத்துக் குதவும் பல அகச் சிறப்புக்களுடன் விளங்குகின்றது. அவற்றுள் ஒன்று இங்கே தரப்பெறுவது]

உலகம் அறிவு, அறியாமை என்ற இரண்டினாலும் தொழிற்படுகின்றது. அறிவினால் ஆக்கமும், அறியாமையால் அழிவும்விளைகின்றன. உலகம் தோன்றிய காலந்தொட்டு மக்கள் வாழ்ந்து வருகிறார்களே. இத்தனைக் காலம் வாழ்ந்த மக்கட்குலம் அறியாமையின் கொடுமையை அறியாமலா இருந்திருக்கும். அதன் விளைவை அறிந்திருந்தும் உலகம் அதனைக் கட்டியழுவதுதான் புதுமை. இது மாயையின் பந்து. தம்மையுங் காட்டாது, உண்மையையுங் காட்டாது தம்மை அணைபவர்களைத் தம்வயமாக்குந் தன்மை யுடையது. இவ்வித மாய மடந்தையின் சம்பந்தமே உலகில் அதிகரித்துள்ளது. இன்னுஞ் சில காலத்துள் அகில உலகமுமே அறியாமையின் சக்கிராதிபத்தியமாய் விடுமென நாம் பூரணமாக நம்பலாம்.

இன்றைய நிலையில் திறந்து நோக்கும் கண்களில் கவலைக் கடலின் திரைகள் மோதுகின்றன. வாழ்க்கை துன்பமாக வருணிக்கப்படுகிறது. பலரால் வெறுக்கப்படுகின்றது. பலர் பட்டினத்தாருடன் பல்லவி பாட முன்வருகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் இச்சீர்கேடு நமக்கேன் விளைய வேண்டுமென எண்ணிப் பார்த்தால் பொருந்துமல்லவா? எண்ணிப்பார்ப்பின் இவையெல்லாம் இதமுடையவை போன்று எம்மை மயக்கும் அறியாமையின் ஆடலே என்பது தெளிவாகும்.

இக்கொடிய இருள் உலகையே விழுங்கிவிடக் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கின்றது. இத்தருணத்தில்

**ஆசிரியர்**
**திரு. வ. செல்லையா அவர்கள்**
**எழுதியது**

உலகத்தைக் காப்பாற்றுவதே காலத்தினற் செய்த நன்றியாகும். ஞாலத்தின் மாண்ட இந்நன்றியையாற்றத் தகுதியுடையவர்கள் பெண்மணிகளே. ஏன்? சகதி மயமான சகோதரிகளுக்குத்தான் எதனையும் சாதிக்கும் சக்தி உண்டு "நல்லதும் தீயதும் செய்திடும் சக்தி நலத்தை நமக்கிழைப்பாள் அல்லவை நீங்குமென்றே யுலகேழும் அறைந்திடுவாய் முரசே" என்று பாரதியார் முழங்குகின்றார். அல்லவை நீங்க, அகிலம் வாழ்க, கருணையே யுருவாய காரிகையர்களே முன்வரவேண்டும். எதனையும சாதிக்கும் சக்தி உங்கள்மாட்டுப் புதைந்து புரளுகின்றது. சந்தேகம் வேண்டாம். சாதப் படைக்கவும் செய்திடுவீர், தெய்வச் சாதிபடைக்கவும் செய்திடுவீர். ஆபத்திலிருந்து உலகை மீட்க வேண்டுமாயின் அது உங்களுக்கே முடியும். அது உங்கள் கடமை. அதைரியம் வேண்டாம். உங்கள் சக்தி உலகைவிடப் பெரியது. உங்கள் சகோதரி ஒருத்தி உலகையே இயக்கும் ஒளிப்பிழம்பாம் விண்மணியைத் தடுத்து நிறுத்தியதை மறந்துவிட்டீர்களா?

காலன் கையிலகப்பட்ட கணவன் உயிரை மீட்டகாரிகையாரின் கௌரவத்தை நிலைநாட்டியவள் உங்கள் இனத்தவளன்றோ? காசினியை அடக்கிக் கயிலைமலையையும் பெயர்க்க முனைந்த இராவணனின் இணையற்ற வீரம் சீதாபிராட்டியின் திண்மையின் முன் முழந்தாளிட்டு வணக்கஞ் செலுத்தி ஏமாந்தமையை நீங்கள் ஏன் மறக்கவேண்டும்! விழியுங்கள்! உங்களால் ஆகாததொன்றில்லை இம்முனையில் உங்களுக்கு வெற்றியளிக்கும் 'மாண்பு' என்ற அணியைப் பூணுங்கள். கூடுமாயின் நீங்களே மாண்பாய் மாறிவிடுங்கள். இல்லவள் மாண்பானால் இல்லதென்? இது பொய்யாமொழி. மனைக்கு விளக்கம் மடவார் என்றாங்கு, இல்லக் கிழத்தியர்களாகிய நீங்களே மணி விளக்காகத் திகழுங்கள். என்ன குறையும் இலோமென இன்பு

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# யாழ்ப்பாணம் ஐக்கியஸரபந்தி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை.**

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்பான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசர்க்காட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49.

S. கனகசபை
சிறப்பர்.


### போர்க்கோலத்தாதயே விருப்புகின்றது போர்த்துக்கல்

பலப்படுத்தும் முறையிற் கோவாவுக்குப் படைகளை மேலும் அனுப்பியிருக்கின்றதாம்போர்த்துக்கேய அரசாங்கம்.

---

### சர்வகலாசாலைப் பதவிகள்

அரசாங்கசேவையிலிருக்கும்பொழுது சர்வகலாசாலைப் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் தங்கள் அரசாங்கப் பதவிகளை நீத்த பின்னரே அப்படிச் செய்யலாமென்றும் தாம் வகித்திருக்கும் அரசாங்க பதவித் தொடர்பில் உடன்படிக்கை ஏதுவாயினுமிருந்தால் அது கவனிக்கப்பட வேண்டுமென்றும் அதன்படி சர்வகலாசாலைப்பதவியிலிருந்து ஒழுக வேண்டுமென்றும் அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

---

நேயர்கள் நெஞ்சம்

# இன்றைய சமய நிலை?

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள புரொட்டஸ்தாந்து, கிறீஸ்து சமயப் பாதிரிமார்கள் இவ்வியாழ்ப்பாணத்தில் வந்து 'சிவன்' கடவுளல்லரென்றும், வேதாகமங்கள் பொய்நூலென்றும் சைவ சமயம் துர்மார்க்கமென்றும், சைவர்கள் அஞ்ஞானிகளென்றும் கூறி அன்றுபோல் இன்றும் மக்களைத் தம் மதத்துக்குச் சேர்க்கின்றார்களே!

பாதிரிமார் பள்ளிக்கூடங்களிலே இக்காலத்திலே பெரிதும் விரும்பப்படும் ஆங்கில பாஷையைக் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களில் கற்கப் புகும் சைவச் சிறார்களில் அநேகர் சைவசமயத்தன்மையை அறியாது கிறீஸ்து மதத்திற் பிரவேசித்தும், நாஸ்திகம் பேசிக்கொண்டும் திரிகின்றார்களே! அவர்களிற் பலர் சைவ சமயத் தன்மையை அறிந்த பின், பச்சாத்தாபம் அடைந்து, வெளிப்பட விபூதி தாரணம், அநுட்டானம் முதலியன செய்துவருகின்றார்கள். சிலர் ஒரு சமயத்திலும் விசுவாசமின்றி எல்லாச் சமயமும் பொய்யென்று சொல்லித் திரிகின்றார்கள். சிலர் எல்லாச் சமயமும் ஒன்று என்று கூறித் தங்களுக்கு மதிப்பைத் தேடிக் கொள்ளுகின்றார்கள். அஞ்ஞானமற்ற மெய்ச் நெறியைக் காட்டி மனிதனுக்கு முத்தியின்பத்தைக் கொடுக்கும் சமயம் சைவசமயமேயாம்.

இத்தேசத்திலுள்ள வறியவர்கள் அநேகர் சைவசமயமே மெய்ச் சமயமென்று அறிந்தும், அன்னம் வஸ்திர முதலியவை பெற்றுப் படிக்கும் பொருட்டும் உத்தியோகம் பார்த்துப் பொருளீட்டும் வழியைத் தேடிக்கொள்ளும் பொருட்டும், அரசாங்க உத்தியோகங்களிலமர்ந்த பாதிரிமார்களிடத்தே ஆதரவு செய்விக்கும் பொருட்டும், கிறீஸ்து சமயப் பெண்களுள் சீதனமுடையவர்களையும் அழகுடையவர்களையும் விவாகம் செய்யும் பொருட்டும் கிறீஸ்த சமயத்தைச் சார்கின்றனர். ஒரு சிலர் இரு சமயங்களுக்கும் தலைமையைக்காட்டி வருகின்றனர். சிலர் இரண்டு பக்கத்துக்கும் பாடாதுவிட்டால் தங்களை வருவாய் குறைந்துவிடுமென்று கருதி நம சமயத்தை இழிவுபடுத்துகின்றார்களே! இது அடாத செயலன்றோ!

இப்பொழுது அரசாங்கத்தினர் ஆங்கிலப் பாஷையை மாத்திரமன்றித் தமிழ் சிங்களம் என்னும் தேசியபாஷைகளையும் விருத்தி செய்ய விரும்பி அவைகளின் பொருட்டு பெரும்பணஞ் செலவழிக்கின்றார்கள். எந்தச் சமயத்தார் தாபித்த பள்ளிக்கூடங்களையாயினும் அவைகளிலே படிக்கும் பிள்ளைகளைப் பரீட்சைசெய்து, அந்தப் பள்ளிக்கூடங்களுக்குப் பொருளுதவி செய்கின்றார்கள். அரசாங்கத்தினர் இவ்வளவு காலமும் உத்தியோகத்துக்கேற்ற கல்வியையே பெரிதும்போற்றி வந்தனர். ஆனால் சுயஆட்சி கிடைத்த பின்பு இவ்வெண்ணம் மாறுபட்டது. முன்பு சமயநூற் கல்வியை விருத்தி செய்ய விரும்புகின்றவர்கள் தங்கள் தங்கள் முதலைக் கொண்டே செய்ய வேண்டுமென்பது அரசினர் கருத்து. பள்ளிக்கூடங்களுக்கு அரசினர் இறுக்கும் பணம் பொது மக்களிடத்த இறைப் பொருளேயாகும். இலங்கைக் குடிகளுள்ளே பெருந்தொகையினர் சைவ சமயிகளும் பௌத்த சமயிகளுமேயாம். கிறீஸ்தவர் தொகை சொற்பமேயாம். ஒரு சமயத்தாருடைய பொருளைக்கொண்டு அவர் மனதிலே மெய்யெனப் பதிந்த சமயத்துக்குத் தீங்கு விளைப்பது எவ்வளவோ அநீதியாகும். கிறீஸ்தவப் பள்ளிக்கூடங்கள் பொது மக்கள் இறைப் பணத்தில் உதவிபெற்றுத் தம் எண்ணங்களைப் பரப்பிவருகின்றார்களே, ஆனால் அப் பள்ளிக்கூடங்களில் கற்கின்றவர் சைவச் சிறார்களே. இக்காலத்தில் ஒரு சூழ்ச்சி செய்திருக்கின்றார்கள் என்னவெனில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் எந்தச் சமயப் பிள்ளைகள் படிக்கிறார்களோ அந்தச் சமயமே படிப்பிக்க வேண்டுமென்பது அரசினர் சட்டம். ஆனால் கிறீஸ்தவப் பாடசாலைகளில் சமயபாடநேரத்தில் 'சன்மார்க்கம்' என்ற பெயரை வைத்துக்கொண்டு சைவ சமயத் துர்ப்பிரசாரஞ் செய்துவருவதை யாழ்ப்பாண மக்கள் அறிவார்களா? எந்தப் பாடசாலையாக இருந்தாலும் அந்த அந்தச் சமயப் பிள்ளைகட்கு அந்த அந்தச் சமயம் கற்பிக்க அரசினர் கட்டாயப்படுத்த முடியாதா? அங்ஙனம் இயலாவிட்டால் பொது மக்கள் இறைப்பணத்திலிருந்து அவர்களுக்குப் பொருளுதவி செய்வானேன். இது நீதியா? கேட்பாரில்லையா? இதற்கு யாழ்ப்பாண மக்கள் இற்றைவரை ஏதும் நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லையே! இனிமேலாகுதல் உணர்ச்சி வருமா? இங்ஙனமிருந்தும் சைவசமய மக்கள் தங்கள் பிள்ளைகளை மேன் மேலும் பாதிரிமார் பாடசாலைக்கு அனுப்புவானேன்? அந்தோ! எவ்வளவு மதியீனம்!!

[தொடரும்.]

ஆசிரியர்:
சி. சிவரத்தினம்

---

### சீனவுக்குச் செல்கின்றார் நேரு

சீனவுக்குச் செல்வாரென்று முன்னரே அறிந்தவாறு பண்டித நேரு அவர்கள் ஐப்பசி (அக்ரோபர்) 16உ சீனவுக்குப் புறப்படுவாரென்று அறிய வருகின்றது.

---

### தாய்மொழியில் தந்தி

ஒருசில தபாற்கந்தோர்களிலிருந்து தாய் மொழியில் தந்தி அனுப்பக்கூடியதாயிற்றுவரையில் இருந்தது. இலங்கையின் பிரதான தபாற்கந்தோர்கள் எல்லாவற்றிலுமிருந்தே தாய்மொழியில் தந்தி அனுப்பும் வசதி அண்மையில் ஏற்படுத்தப்படுமாம்.

---

# வழிகாட்டி விளங்கிய ஒளிவிளக்குகள்

## நாகலிங்கம் நூற்றாண்டு விழா நாடெங்கும் நன்கு நிகழ வேண்டும்



இன்று எமது நாடு சுதந்திரம் அடைந்திருக்கிறது. அச்சுதந்திரத்துக்கான விதையை இட்டு ஆரம்பப் பணியாற்றிய பெரியார்களாகும் சேர். பொன். குமாரசுவாமி, சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம், திரு சி. ஏ. லோரென்ஸ், சேர் ஜேம்ஸ் பீரிஸ் முதலாம் தேசாபிமானிகளுடன் வைத்தெண்ணப்படக்கூடிய இரு உத்தம புருஷர்களை பொதுவாக இலங்கையும் சிறப்பாக ஈழத் தமிழகமும் என்றும் மறக்க முடியாது.

ஒரு அன்னிய இனத்தார், வேற்றுநாடு ஒன்றினைக் கைப்பற்றி அதிலே, கேட்டவாளியானது, தன்வசப்பட்ட புழுக்களைத் தன்மயமாக்குவது போல தம அரசியல் பெருளாதாரச் செல்வாக்குக்குள் அடக்குவதற்கு அநுசரணையாக முதலில் தம பாதிரிமாரை அனுப்புவர்; பின் வர்த்தகரை அனுப்புவர்; அதன் பின் யுத்த வீரரை அனுப்புவர் என்று ஒரு அறிஞர் கூறியது முற்றிலும் உண்மை.

### திரு அ. க. சுப்பிரமணியம் உதவியது

நமது இலங்கையைப் பொறுத்த வரையிலும் இக் கூற்று உண்மையாகவே இருந்தது.

அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் தம் பண்பாட்டைத் தாம் வெற்றிகொண்ட நாடுகளிற் பரப்புதற்கு எந்த விதமான கருமங்களைக் கையாண்டனரோ, அந்தவிதமான முறைகளையே கைக்கொண்டு அவர்கள் வகுத்துள்ள திட்டங்களைக் கவிழ்த்து தமிழினத்தின் பண்பைக் கிலைநாட்டி, இலங்கை வாழ் இந்துக்களின் சுயமரியாதையைப் பேணி ஈழத் திருமணி நாட்டின் அரசியற் சுதந்திரத்துக்கு விதையூன்றிய பெருமக்களில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலப் பெருமான காட்டிய வழி-படி நின்று பணியாற்றிய வண்ணை ஸ்ரீ. சி. த. மு பசுபதிச் செட்டியார் அவர்களும், வண்ணை அப்புக்காத்து ஸ்ரீ. சி. நாகலிங்கம் அவர்களும் சிரேட்டமானவர்களென்று கூறினால் அது மிகையாகாது. இவ்விரு பெரியாரும் நம் இனத்துக்கும் நம் சமூகத்துக்கும் நம் நாட்டுக்கும் ஆற்றிய சேவைகள் அளப்பில. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியையும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையையும் இப்பெரியார்கள் அக்காலத்திலே தாபித்திருக்காவிட்டால் இன்று இந்துக்களின் தமிழ்மக்களின் நிலை என்னவாகியிருக்கும் என்பதனை நாம் ஒவ்வொருவரும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்று இலங்கை யெங்கணும் உள்ள இந்துக் கலாசாலைகளுக்கும் இந்துத் தாபனங்களுக்கும் வழிகோலியவர்கள் இவ்வுத்தம புருஷர்களேயாகும் இந்த இலங்கையிலே தமிழினம் இருக்கும்வரையில் — இந்து சமூகம் இருக்கும் வரையில் — அப் பெரியாரிருவரும் அன்று ஆற்றிய பணியை மறக்கமுடியாது.

அப்புக்காத்து நாகலிங்கம் அவர்களின் நூற்றாண்டுப் பூர்த்திவிழா வருகிற ஆண்டு ஐப்பசிமாதம் சதய நட்சத்திரத்தில் வரவிருக்கிறது. அது ஒரு புண்ணிய தினம். தமிழினத்துக்குப் புத்துயிர் கொடுத்த பூமான் பிறந்த தினம். அதனைத் தமிழ் மக்கள் அனைவரும் போற்றிக் கொண்டாட வேண்டும். இது விஷயத்தில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகார சபையாரும் வழிகாட்டி இவ் விழாவை யாழ்ப்பாண மளவில் மாத்திரம் வைத்துக்கொள்ளாது அகில இலங்கைக்குமுரிய ஒரு திருநாளாகக் கொண்டாட ஏற்பாடு செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். அந்த ஏற்பாடுகளை இப்போதிருந்தே செய்யவேண்டும். நன்றே யென்பதனை இன்றே செய்யவேண்டும்.

# மொழிவாரி மாகாண அமைப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏமாற்றும் சூழ்ச்சியோதான் ஆகும்.

### பூகோளம்

பூகோளரீதியாக தொடர்ச்சியாக இருக்கும் ஒரு மொழிபேசும் நிலப்பரப்பைச் சேர்த்து மாகாணங்கள் அமைக்க வேண்டும் என்பதுதான் இச் சிக்கலுக்கு அடிப்படை. அவ்வாறிருக்க யாரேனும் பிறமொழி பேசுகின்ற மக்கள் மத்தியில் சிதறிக் கிடக்கும் ஒரு கிட்டை அங்கிருந்து பிரிப்பதற்கு முற்படுவரோ? பம்பாயி லுள்ள மாதுங்கா பகுதியை ஐக்கிய தமிழகத்திற் சேர்க்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்யும் ஒருவன் ஜனநாயகவாதியாக இருக்க முடியுமா? முடியவே முடியாது எனவே பூகோள சாத்திரம் காட்டி எதிர்ப்பதிலும் பயனில்லை.

### ஐக்கியத்திற்கு உலைவைக்குமா?

மற்றொரு எதிர் விவாதமென்னவென்றால் மொழிவாரிப் பிரிவினை நாட்டின் ஐக்கியத்திற்கு உலைவைப்பதோடு இனவெறியையும், குரோதத்தையும் வளர்க்கும் என்பதாகும். இதுவும் ஒரு தீய பிரசாரமேயாகுமே தவிர வேறில்லை. மாறாக மொழிவழி மாகாணங்கள் அமைந்தால் மக்களாட்சியும் மக்களிடையே ஐக்கியமும் தங்குதடையின்றி மலர்ந்து நாடு வேகமாக முன்னேறும். ஒவ்வொரு இனமும் தங்கள் தங்கள் மொழியை, கலையை, கலசாரத்தைப் போற்றிவளர்க்கவும் வாய்ப்பும் ஏற்படும்.

இத்தகைய ஒரு நியாயமான ஜனநாயக ரீதியான ஒரு மக்கள் கிளர்ச்சிக்கு மனிதருள் மாணிக்கம் என மகாத்மா காந்தியடிகளால் போற்றப்பட்ட நேருஜி பதில்கூறும் தோரணையைப் பாருங்கள் பொறுத்திருங்கள் உயர்தரக்குழு உங்கள் சிக்கலைச் சுகமாகத் தீர்க்கும் என்பதேயாகும். இந்த வார்த்தைகள் நேருஜியிட மிருந்து வருவதால், மக்களிடையே ஒருவேளை சற்றுத திகைப்பை உண்டாக்கலாம். எனவே நாம் சற்று நிதானமாகச் சிந்திக்க வேண்டும். குழுவை நம்பி நாம் சும்மா இருக்கலாமா என்று பதில் நிச்சயமாக இருக்கக் [illegible] முடியாது என்பதுதான். ஏன்? அதற்குப் பல காரணங்களுண்டு. முதலாவதாக இந்தக் குழு மொழிவழி மாகாணங்களைப் பிரிப்பதற்காக என்று ஒரே அலுவலுக்காக நிறுவப்படவில்லை. மொழி பூகோள அமைப்பு, பொருளாதாரம் இன்னும் அவர்களுக்குத் தோன்றிய எல்லா அம்சங்களையும் கணக்கி லெடுத்து மாகாணப்புனர் நிர்மாணம் செய்வதற்காகவேதான் இந்தக் குழு நியமனம் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே மொழிவழி மாகாணம் விரும்புவோர் இதன் அறிக்கைக்காகக் காத்திருப்பதில் யாதொருவிதமான பயனும் ஏற்படாது.

### வேறு வழி என்ன?

ஆகவே வேறு வழி இறுதியில் போராட்டமே. மொழிவழி மாகாணங்கள் அமைவதற்கு மக்களின் கிளர்ச்சியே ஒரே வழி. அதற்கு அண்மையில் நடந்து வெற்றிபெற்ற ஆந்திரர்களின் அறப்போரே நமக்குச் சான்றாகும். மேலும் பரிபக்குவமான காங்கிரசுக்காரர்கள்கூட இக் கிளர்ச்சிகளில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். காங்கிரசுத் தலைவர் பண்டித நேருவின் சுற்றறிக்கைக்கு மாறாகவே, காங்கிரசார் மொழி வாரி மாகாணப் போராட்டத்திலே பங்கு கொள்ளுகிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். மராட்டிய மாகாணம் கோரி காட்கிலும், விசால ஆந்திரம்கேட்டு சுவாமி இராமானந்த தீர்த்தரும் சம்யுக்த கன்னடம் கேட்டு அனுமந்தய்யாவும் கிளர்ச்சி செய்கிறார்களே? மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் பொன்கலமா........? மேலும் கிளர்ச்சியில் ஈடுபட்டால்மட்டுமதான், மொழிவழி மாகாணம் அமைத்து மக்களாட்சி மலரச் செய்ய முடியும்.

—தமிழ்நாடு

## அரசாங்க அறிவித்தல்கள்

### வன பரிபாலனப் பகுதி

N. 2351-(1) 110 கழித்த பாலை, முதிரை, காட்டாமணக்கு, கல்மில்ல, ரூணா, சூரியயாரை, மொனமூல்ல மரங்களும்: 1403 3கன அடி; 23கூறுகள் அடங்கிய 1853 கழித்த அரிந்த மரத்துண்டுகள்: 11 0 6 கன அடி – ஒவ்வொரு கூறும் ஏறக்குறைய 50 கன அடியும் அதற்கு மேலும்; 2 கூறுகள் அடங்கிய 100 அரிந்த மரத்துண்டுகள்: 250 0 கன அடி - ஒவ்வொரு கூறும் ஏறக்குறைய 125 . 0 கன அடி - முதலியன 10 – 9 – 54 காலை 10 மணி தொடக்கம் மாங்குளம் அரசினர் மரக்காலையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

N 2351 – (2) 11 - 9 - 54 காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர் மரக்காலையில் 100 பாலை, ரூணா, முதிரை மரங்கள்; 10 கூறுகள் அடங்கிய அரிந்த மரங்கள் முதலியன பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

விற்பனைக்கு முன் மரங்களைப் பார்க்க விரும்புவோர் அவ்வப் டிப்போ அதிகாரிகளின் அனுமதியுடன் பார்வையிடவேதோடு, அவர்களிடமிருக்கும் விளம்பரத்தின் பிரதான நிபந்தனைகளையும் அறிந்து கொள்ளல் வேண்டும்.

G. 21 3—9—54.

## சிந்து நதித் தண்ணீர்ப் பிணக்கு

சிந்துநதித் தண்ணீர்ப் பிணக்கை நீக்கும் பொருட்டு உலக வங்கி கொடுத்த தீர்ப்பைப் பாகிஸ்தான் நிராகரித்து கின்றது. உலக வங்கியார் வேறு வழிகளை இப்பொழுது எடுத்துக் காட்டியிருக்கின்றனர். அவற்றை இந்தியா ஆராய்கின்றது.

## ஸ்ரீலஸ்ரீ நட்சனுமூர்த்தி சுவாமிகள் திருநாள்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வரைந்திருக்கிறார். திருவருளால் தமக்குக் கிடைத்த பொருள்களையும் தருமம் செய்வதிற் செலவழித்தார். இயமகானுடைய துறவொழுக்கத்திறகு ஈடுசொல்ல முடியாது. இதனை ஈழமண்டல சதகத்தாரும் வியந்து கூறியுள்ளார்கள். இத்தகைய அரும் பெரும் துறவுபூண்ட சுவாமிகள் பாரத நாட்டிற் சைவப் பணியாற்றிச் சில வருடங்களுக்குமுன் தில்லையிலேயே சிவபதமடைந்தார்கள்.

யாழ்ப்பாணத்து சிதம்பரம் மடதரும சந்நியாசிகளுள் இவரும் ஒருவர். இவருடை திருநாளை நாம் எல்லோரும் எதிரேவரும் பௌர்ணிமைத் தினத்தன்று கொண்டாடிக் குதூகலித்து அஞ்சலிசெய்வோமாக.

## உலகசமாதானத்துக்குவழி

இந்திய அரசாங்க சபையிலே வெளிநாட்டுக் கொள்கைகளைப்பற்றி பண்டித நேரு அவர்கள் பேசும்போது இன்றைய உலகின் எந்தப் பகுதியிலெனினும் நிகழும் எந்த நிகழ்ச்சியையும் யார் விரும்பினுலென்ன விரும்பாவிட்டாலென்ன தங்கள் தங்கள் கருமங்களைத் தங்கள் தங்கள் முறைகளில் ஒவ்வொரு நாட்டாரும் கையாளுதலைப் பார்த்து ஒரு நாட்டுக் காரியங்களில் வேறொரு நாட்டார் கைவையாது தங்கள் காரியங்களைப் பார்ப்பதே உலக சமாதானத்துக்கு வழி என்று கூறினர். "வாஷிங்டன் போஸ்ற்" என்னும் அமெரிக்கப் பத்திரிகை இத் தொடர்பிற் பண்டித நேருவுக்குப் புகழமாலை சூட்டுகின்றது.


## வாடகைக்குக் கொடுக்க இருக்கும் கடை.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குச் சமீபத்தில் சிவதொண்டன் நியான மண்டபத்துக்கு எதிரில் இருக்கும் ஒரு கடை வாடகைக்குக் கொடுக்க இருக்கிறது. தேவையானவர்கள் என்னிடம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

சீத மு. II.

சிதம்பரநாதச்செட்டியார்.
M. 114 3—9—54.


## தாய் மொழியும் தண்ணீர் வசதியும்

—0—

யாழ்ப்பாணப் பிரிவு சேமிப்புச் சபை ஆதரவில் நிதி மந்திரி ஸ்ரீ. M. D. H. ஜயவர்தன அவர்களுக்கு ஸ்ரீ.ம. ஸ்ரீகாந்தா மாகாண அதிபர் அவர்கள் தலைமையில் அளிக்கப்பெற்ற விருந்துபசாரக் கூட்டத்திலே பேசும்போது அரசியல் திட்டத்திலே தமிழும் சிங்களமும் அரசாங்க மொழிகளென்பது அமைக்கப்பட வேண்டுமென்று திரு அ. அருளம்பலம் அவர்களும் காங்கேயன் துறையிலிருந்து மின்சார சக்தி பெறுதற்கு வேண்டிய ஒழுங்கு, யாழ்ப்பாண நகரத்துக்குத் தண்ணீர் வசதி ஆகியவைபற்றி முகாந்திரம V. மகேசன் அவர்களும் குறிப்பிட்டார்கள்.

## கோவாவைப்பற்றி நேருவின் கருத்து

—0—

இந்திய முதல் மந்திரி நேரு அவர்கள் "லொக்சபா"விலே கோவாவைப் பற்றிப் பேசும்போது அன்னியர் ஆட்சியிலிருந்து தங்களை விடுவித்து இந்தியாவுடன் இணைந்து வாழ விரும்பும் உரிமை கோவா மக்களுக்கிருப்பது சரி என்று இந்தியா உறுதியாக நினைக்கின்றது என்று கூறினர். அன்னியர் ஆட்சியிலிருந்து நீக்கும் முறை இந்திய சுதந்திரத்தோடு நடமாடத் தொடங்கிவிட்டது. அன்னியர் ஆட்சியின் கீழ் இன்னும் எஞ்சியிருக்கும் இடங்களும் அன்னியர் ஆட்சியிலிருந்து நீங்கும் வரையில் அன்னியர் ஆட்சியிலிருந்து நீங்கத் தொடங்கிய தொடக்கம் நிறைவேறியதாகமாட்டாது. போர்த்துக்கேய அரசாங்கம் பட்டாளங்களைக் குவித்தல் எங்கள் உரிமைகளுக்கு மாறாகவேயிருக்கலாம். ஆயினும் போர்த்துக்கேயரின் முறைகளை நாங்கள் கையாள மாட்டோம் என்று தொடர்ந்து பேசும்போது கூறினர்.

## எகிப்துக்கு அமெரிக்க உதவி

எகிப்துக்கு அமெரிக்கா உதவி கொடுப்பதற்குப் பேச்சு நடப்பதாயிருந்து அது தடைபட்டிருக்கின்றது. உலக பொதுவுடைமை எதிர்ப்புக்கு எகிப்து சம்மதமென்றாலே அமெரிக்கா உதவி கொடுக்குமென்று தெரிவிக்கப்பட்டது. எந்த ஒரு கட்சியிலும் சேராது இந்தியாவைப்போல் நிற்பதே எகிப்தின் கருத்துமாகலின் அத்தகைய கட்டுப்பாட்டுக்கு எகிப்து உடன்படவில்லை.

## செந்தமிழ்ச் சிவத்திரு நான்மறைகள்

5-ம் பக்கத்தொடர்ச்சி

கும் பழைய உபநிடதங்களைப் போல் அக்காலத்தில் நிலவிய அறிவு நூல்களையே வேதம் எனத் திருமூலர் குறித்தருளினர். கடவுளைப் பொதுமையில் வைத்து அது என எண்ணில் அவ்வெண்ணம் கடவுளைச் சிறப்பாக நினைத்தற்கு இடந்தராமையின், பிற்காலத்துச் சான்றோர், சிவம் எனக் கடவுளைச் சிறப்புப் பெயரிட்டுப் பயிலும் முறையினை விதித்துக் கூறும் ஆகம[illegible]னைத் திருமூலர் சொன்கின்ற[illegible]. இதனை,

"மன்னிய சோகமாம்
மாமறை யாளர்தம்
சென்னியதான சிவோகமாம்
ஈதென
அன்னது சித்தாந்த
மாமறை ஆய்பொருள்
துன்னிய ஆகம
நூலெனத் தோன்றுமே"

என அவர் அருளிய திருப்பாட்டால் உணர்க. இங்ஙனம் சோகம் பாவனையைக் கூறும் வேத நூலும் சிவோகம் பாவனையைக் கூறும் ஆகம நூலும் தமிழ் மொழியிலும் ஆரியமொழியிலும் அக்காலத்தில் ஒருங்கிருந்தனவென்னும் உண்மையை,

"மாரியுங் கோடையும்
வாய்பனி தூங்கின்ற
ஏரியும் நின்றங்
கிளைக்கின்ற காலத்தே
ஆரியமுந் தமிழும்
உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக்
கருணை செய்தானே"

என, திருவாய்மலர்ந்து திருமூலர் அறிவுறுத்துகின்றார். இருக்கு, யசுர சாமம் முதலியவற்றில் அங்ஙனம் சோகம் பாவனை அறிவுறுத்தும்பாட்டுக்கள் காணப்படாமையின் அதனை அறிவுறுத்தும் வேதனெ அவரால் கொள்ளப்பட்டவை, இருக்கு முதலிய ஆரியவேதங்களாகாமை தெளியப்படும். அங்ஙனமே சிவோகம் பாவனையை வலியுறுத்தும் பகுதிகள் இப்பொழுதுள்ள காமிகம், காரணம் முதலிய வடமொழி ஆகமங்களில் காணப்படாமையின் அச்சிவோகம் பாவனையை விளக்குவனவாக அவரால் கொள்ளப்பட்டன காமிகம் முதலிய வடமொழி ஆகமங்கள் அல்லவென்பதும் ஆராய்ச்சியாளர் துணிபாகும்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Friday September 3 1954.